# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மறு ஆய்வு மனு எண் 4 /2016**

திரு. P. ரங்கநாதன்,
த/பெ பழனிச்சாமி,
கொமாரப்பாளையம் அஞ்சல்,
மூலனூர் வழி,
தாராபுரம் வட்டம் 638 106. . . . . மேல் முறையீட்டாளர்
(திரு. P. ரங்கநாதன்)

எதிர்

1) செயற் பொறியாளர் /இ & ப,
தாராபுரம்,
உடுமலைப்பேட்டை மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
உடுமலைப்பேட்டை ரோடு,
தாராபுரம் – 638 656. . . . . . . எதிர்மனுதாரர்
(திரு. முருகானந்தம், செயற்பொறியாளர்/தாராபுரம்)

**கேட்புரை நாள்– 17.11.2016**

**ஆணை நாள் – 18.4.2017**

திரு. P. ரங்கநாதன், த/பெ பழனிச்சாமி, கொமாரபாளையம் அவர்களின் மேல்முறையீட்டு மனு எண்.16/2016ற்கான மின்குறைதீர்ப்பாளரின் 22.7.2016 நாளிட்ட ஆணையை மறு சீராய்வு செய்யவேண்டும் என்று சமர்ப்பித்துள்ள 23.8.2016 நாளிட்ட மனு மறு ஆய்வு மனு எண்.4/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 17.11.2016 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட

வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவை விசாரணை செய்து மின்சார குறைதீர்ப்பளர் வழங்கிய ஆணை பொருண்மை பற்றிய தவறு, அடிப்படை உண்மை பற்றிய அறியாமை ஆகியவைகளின் காரணமாக வழங்கப்பட்ட தீர்ப்பாக உள்ளதால் மறு சீராய்வு செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார்.

2. **மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:**

2.1 2004 மின் பகிர்மான விதி மற்றும் மின் வழங்கல் விதி ஏற்படுத்தப்பட்ட பின் மின்வாரியம்/ பகிர்மான கழகம் தன்னிச்சையாக எந்தவிதியையும் கூறி மின்இணைப்பு வழங்குவதை நிறுத்தி வைக்க, இடம்மாற்றம் செய்ய மறுக்க அதிகாரம் இல்லை.

2.2 ஒரு கிணற்றில் வேறு ஒரு மின்இணைப்பு வழங்க மறுப்பதாக இருந்தாலும் சர்வே எண். மாற்றம் இடமாற்றம் செய்ய மறுப்பதாக இருந்தாலும் மின்பகிர்மான விதி மற்றும் வழங்கல் விதி இவைகளை குறிப்பிட்டுதான் மறுக்க முடியுமே தவிர மின்வாரியம் மினபகிர்மான கழகத்தின் விதிமுறைகளை குறிப்பிட்டு மறுப்பு தெரிவிக்க எந்த அதிகாரமும் இல்லை.

2.3 மின்குறைதீர்ப்பாளர் மின்சார வாரியம்/மின்பகிர்மான கழகம் தனது சொந்த விதிமுறைகளை அமுல்படுத்தி மின் இணைப்பு வழங்க மறுப்பதும், நில அளவை எண் மாற்றம் செய்ய அனுமதி மறுக்கவும் அதிகாரம் உண்டா அதனை பின்பற்றி நுகர்வோர் குறைதீர்மன்றம் மின்இணைப்பு வழங்க மறுத்து தீர்ப்பு வழங்கியது செல்லத்தக்கதா என்பதை ஆராய்ந்து தீர்ப்பு வழங்கி இருக்க வேண்டும். எனது கோரிக்கையின் அடிப்டை

உண்மையை அறியாமல் அது குறித்து தெளிவுபடுத்த மின்குறைதீர்ப்பாளர் முன் வராமல் தீர்ப்பு வழங்கி இருப்பது அவர் சுட்டிக்காட்டியுள்ள விதிகளை எதிர்மறையான நோக்குடன் அனுமானங்களின் அடிப்படையில் அனுகுவதால் ஏற்பட்ட தவறாகும்.

2.4 அவருக்கு சர்வே எண்.3/1Aல் உள்ள கிணற்றில் மேலும் ஒரு மின் இணைப்பு தேவையில்லை. அவருக்கு 3/1பில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின் இணைப்பு வழங்கினால் போதும் ஆனால், ஒருவருக்கு ஒரு கிணற்றில் அல்லது ஒரு சர்வே எண்ணில் ஒன்றுக்கு மேல் மின் இணைப்பு வழங்க மறுப்பது என்னைப்போன்று மின்இணைப்பு முழுவதும் சொந்தமல்லாமல் 6ல் 1பாகம், 3ல் ஒரு பாகம் என பகுதி பாகம் வைத்திருப்பவர்களுக்கு பொருந்துமா என்பதை மின்குறைதீர்ப்பாளர் ஆராய்ந்திருக்க வேண்டும் அதுபோல் ஆராயதது பொருண்மைப்பற்றி அறியாமல் கோரிக்கையின் அடிப்படை உண்மை அறியாமல் மேலோட்டமாக ஆராய்வதை வெளிப்படுத்துகிறது. ஒரு மின்இணைப்பு என்பது முழுவதும் ஒருவருக்கே சொந்தமாக இருப்பதைத்தான் வெளிப்படுத்தும் ஒரு மனிதன் என்பது ஒரு காலை மட்டும் குறிக்காது ஒரு மரம் என்பது ஒரு கிளையை மட்டும் குறிக்காது மின்சார பகிர்மான விதி, மின் வழங்கல் விதி, மின்சார சட்டம் 2003 இவற்றின் எந்த பிரிவும் மின் இணைப்பில் ஒரு பகுதி உரிமையை முழு மின் இணைப்பிற்கான உரிமையென கொள்ள வேண்டும் என தெரிவில்லை.

2.5 விதி பிரிவு 8ல் மட்டும் கீழ்கண்டவற்றை கணக்கீடு முறைக்கு முழுவதுமாக கொள்ள வேண்டும் என தெரிவிக்கிறது. பிரிவு 8(4)ல் கடைசி எண்.5 வரை இருப்பவை கீழ்நிலை 10 எண்ணிற்கும் 6 முதல் 9 வரை உள்ளவை 10 அக கணக்கிட வேண்டும் என தெரிவிக்கின்றது. பிரிவு 8(7)ல் மின்கட்டண பட்டியல் மற்றும் இதர கட்டணங்கள் ஒரு பட்டியலில் /மதிப்பீட்டில் நெருங்கிய ரூபாய்க்கு முழுமைப்படுத்தப்படவேண்டும் என தெரிவிக்கிறது.

2.6 இதன் மூலம் தெரிவது 50 சதவீதம் கூடுதலாக இருந்தால் மட்டுமே கணக்கீட்டிற்கு முழுமையாக கொள்ள வேண்டும். அதுவே சொத்துவின் உரிமையை முழுமையாக கொள்ள முடியாது. மின்பகிர்மான விதி, மின்வழங்கல் விதி மின்சார சட்டம் ஆகிய எதிலும் மின்இணைப்பு என்று ஒரு முழுமையான மின்இணைப்பை குறித்துதான் கூறப்படுகிறதே தவிர பகுதியான ஒரு பாகத்தை முழுயைாக எடுத்துக்கொள்ள வேண்டும் என கூறவில்லை. சட்டத்தில் சொல்லப்படாதவை எதுவும், தடைசெய்யப்படாத எதையும் நுகர்வோருக்கு சாதகமாகக்கொள்ள வேண்டும். நுகர்வோர் நலன், விவசாயிகளின் நலன் தொழிலாளர் நலன், குழந்தைகள் நலன் அனைத்தும் சட்டங்களும் மனிதனின் சமூக பிரிவிற்குதான் ஆதரவு அளிக்கின்ற சட்டங்களாக உள்ளன. முதலாளியின் நலன், நிறுவனங்களின் நலன் என எந்த சட்டமும் இல்லை.

2.6 எனவே, பகுதி மின்சார உரிமையை முழு உரிமையாக எடுத்துக்கொண்டு வேறு மின்இணைப்பு வழங்க முடியாது என விண்ணப்பத்தை தள்ளுபடி செய்ய எந்த விதியின் எந்த பிரிவு அனுமதி வழங்குகிறது என்பதை மின் குறைதீர்ப்பாளர் தெளிவுபடுத்த வேண்டும்.

2.7 அவர் அவரது மேல்முறையீட்டில் விண்ணப்ப பதிவு என்பது விவசாயின் உரிமையை பதிவு செய்து என்றும், விண்ணப்பித்த இடத்தில்தான் மின்இணைப்பு பெறவேண்டும் என்பது சட்டமும் இல்லை கட்டாயமும் இல்லை தேவைகேற்ப எங்கும் பெறலாம் என்று கூறியுள்ளார். இடமாற்றத்தை நில அளவை எண் மாற்றத்தை மின் வழங்கல் விதியோ மின்பகிர்மான விதியோ தடுக்காத நிலையில் மின்பகிர்மான கழகம் தடுக்க முடியாது என கூறியுள்ளார். மின்சார குறைதீர்ப்பாளர் விண்ணப்ப பதிவு கிணற்றின் சர்வே எண்னை அடிப்படையாக கொண்டதா அல்லது விண்ணப்பம் செய்பவரின் உரிமையை அடிப்படையாக கொண்டதா என ஆராய முற்படும்பொழுது விவசாய விண்ணப்ப படிவம் எண்.2ஐ ஆராய்கின்றனர்.

அதில் வரிசை எண்.1ல் பெயரும் வரிசை எண்.3ல் புல எண்ணும் வரிசை எண்.5ல் எவ்வளவு ஏரியா என கேட்கப்பட்டு கிணற்றின் உரிமை சான்று கோரப்படுகிறது. ஆவணங்கள் கிணற்றிற்கு கோரப்படுவதால் பதிவு கிணற்றிற்குதான் என்றும், நபருக்கு அல்ல என்றும் தான் தீர்மானிப்பதாக சுலபமாக தீர ஆராயாமல் முடிவுக்கு வந்துள்ளார். விவசாய விண்ணப்பத்தில் முதல்முதலாக  கோரப்படும் விபரமே விண்ணப்பிக்கும் நபரின் பெயரும் விலாசமும்தான் என்பதன் மூலம் இணைப்பை விண்ணப்பிக்கும் நபருக்குத்தான் வழங்க முடியும் என மினசார குறைதீர்ப்பாளர் அறிந்திருக்கவில்லை. அதுபோலவே இணைப்பு தேவைப்படும் புல எண். மின் இணைப்பு வழங்க கூடிய இடத்தினை அறிவதற்காக தான் என்பதையும் ஆவணங்கள் அனைத்தும் சம்மந்தப்பட்ட நபரின் உரிமையில் உள்ளதா என்பதுதான் ஆராய்பபடுகிறது. மேலும், மின் இணைப்பு சம்மந்தப்பட்ட எந்த சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்படுபவர், தவறு நடக்கும்பட்சத்தில் அதற்கு பதில் சொல்ல கடமைப்பட்டவர் மின்இணைப்பு  விண்ணப்பதாரர்தான். கிணறு பணம் கட்டாது, பதில் சொல்லாது,  சட்ட திட்டங்களை மதிக்காது இதை ஆராய்ந்து அறிய மின் குறைதீர்ப்பாளர் தவறியது அவர் அடிப்பபடை உண்மைப்பற்றி அறியாமல் எடுத்த முடிவாகும் என குறிப்பிடுகிறார்.

2.8 விவசாய கிணற்றுக்கு விண்ணப்பிக்கும் நபர் இறந்துவிட்டால் அவரின் வாரிசுக்கு விண்ணப்பம் மாற்றப்படுவது எதனால் விண்ணப்பிக்கும் நபரின் உரிமையை மதிக்கின்ற காரணத்தால் தான் விண்ணபத்தாரரின் உரிமை சம்பந்தப்பட்டதல்ல என்றால் முன்னுரிமை மாறாமல் வாரிசுக்கு பெயர் மாற்றம் எப்படி செய்ய முடியும். பெயர் மாற்றம் அனுமதிக்கும் நிலையில் பதிவு  செய்த கிணற்றில் மின்இணைப்பு உள்ள கிணற்றில் தண்ணீர்  இல்லை என்றால் வேறு கிணற்றுக்கு இடமாற்றம் அனுமதிக்கும் நிலையில் கிணற்றின் உரிமையை பதிவு செய்வதுதான் விண்ணப்ப பதிவு என எப்படி

ஏற்றுக்கொள்ளமுடியும். இது மின்குறைதீர்ப்பாளர் பொருண்மை பற்றிய அறியாமை மற்றும் அடிப்படை உண்மை பற்றி அறியாததால் ஏற்பட்டள்ள தவறாகும்.

2.9 அதுபோலவே அவர் விநியோக விதி பிரிவு 37ஐ குறிப்பிட்டு சர்வே எண்னை மாற்றி கிணறு இடமாற்றம் வழங்கலாம் என குறிப்பிட்டேன். ஆனால், மின் குறைதீர்ப்பாளர் அவர்கள் மின்பாதை அமைக்கப்பட்ட பின்பு மின்இணைப்பு வழங்குவதற்கு முன்பு, அந்த மின்இணைப்பை வேறு இடத்திற்கு மாற்ற விரும்பினால் மாற்றம் கோரும் விண்ணப்பதாரர் அந்த மாற்றித்திற்கான அந்த முழு தொகையும் ஏற்க வேண்டும் என்று அவற்றை முன்பணமாக செலுத்திய பின்பு மாற்றும் வேலை ஆரம்பிக்கப்படும் எனத் தெரிகிறது. என பத்தி 11.13ல் தெரிவித்துள்ளார் அது உண்மைதான். ஆனால், இந்த விதி மூலம் அறிவது என்னவென்றால் மின்இணைப்பு வழங்குவதற்கு மின்பாதை இழுக்கப்பட்டு மின் இணைப்பு வழங்கபபடும் அந்த கடைசி நிமிடம் வரையில் இடம் மாற்றம் கோர விண்ணப்பதாரர் உரிமைபடைத்தவர் என்பதாகும். இந்த விதி 37 மின்உரிமம்தாரர் செலவு செய்து மின் இணைப்பு லைன் மற்று உபகரணங்கள் பொருத்திய பின் விண்ணப்பதாரர் இடமாற்றம் கோரும் போது ஏற்கனவே செய்த செலவை ஈடுகட்டுவதற்கும், மின் உரிமம்தாரர் நஷ்டப்படாமல் மின்இணைப்பு பெறும் நபரிடம் பெறவேண்டும் என்பதாகும். செலவை விண்ணப்பதாரர் ஏற்பதா அல்லது மின் பிரிவில் செலவை எவர் ஏற்பது என்பது மட்டுமே தெளிவுப்படுத்தப்படுகிறது. இந்த பிரிவில் லைன் இழுக்காத நிலையில் உள்ள மின் இணைப்புகளுக்கு இடமாற்றம் பேப்பர் அளவில் நிலஅளவை மாற்றம் செய்ய எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை என்பதை மின்குறைதீப்பாளர் கவனிக்க தவறிவிட்டார். பல பணிகளை செய்த பின்பு இடமாற்றம் கோரவாய்ப்பு அளிக்கும்போது எந்த பணியும் செய்யாமல் பேப்பர் அளவில் விண்ணப்பத்தில் நிலஅளவை எண் மாற்றம் செய்வதால் மின் உரிமம்தாரருக்குஎந்த நஷ்டமும் இல்லை. அதனால் இடமாற்றத்தை நில அளவை எண்

மாற்றத்தை தடுக்க வேண்டிய அவசியமோ, அதை குறிப்பிட வேண்டிய அவசியமோ இல்லை என்பதால் விதிகளில் இடம்பெறவில்லை. இது உண்மையில் இடம்மாற்றம் கூட இல்லை ஏன் என்றால் மின்இணைப்பு ஓர் இடத்தில் வழங்கி வேறு இடத்தில் மாற்றினால்தான் அது இடமாற்றம். இது வெறும் நிலஅளவை எண் மாற்றம் மட்டுமே.

2.10 மின் வழங்கல் விதி 5 பல்வகை கட்டணங்கள் என்ற தலைப்பில் பிரிவு 6ல் இடமாற்றம் குறித்தும் அதற்கான கட்டணம் குறித்தும் கூறப்படுகிறது. அனைத்தும் நடைமுறையில் இயக்கத்தில் உள்ள மின்இணைப்புகளுக்கு மட்டுமே பொருந்தும் நடைமுறையில் இயக்கத்தில் உள்ள இணைப்புகள் கதவு எண்.மாறி சர்வே எண்.மாறி எங்கும் இடமாற்றம் செய்யலாம் என கட்டணம் பெற்றுக்கொண்டு அனுமதிக்கும்போது, அளிக்கப்படாத மின் இணைப்புகளுக்கு இடமாற்றம் அனுமதிக்க என்ன தடை இருக்க முடியும்.

2.11 அரசின் விவசாய ஊக்குவிப்பு கொள்கைக்கு ஆதாரவாக விவசாயின் நலன் கருத்தில் கொண்டு பொதுநோக்கோடு சிந்திக்கும் போது எந்தநிலையிலும் இடமாற்றம் செய்வது ஏற்புடையதே. இடமாற்றம் நில அளவை எண் மாற்றம் ஆகியவைகளை மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் விதிமுறைகளோ மாநிலஅரசின் விதிமுறைகளோ எந்தநிலையிலும் தடுக்கவில்லை. ஆனால், மின் உரிமம்தாரர் மட்டும் விவசாய நலனுக்கு எதிரான கொள்கையினை வகுத்து விசாயிகள் மின்இணைப்பை பெறுவதை பல காலமாக தனது சொந்த விதிமுறைகளின் மூலம் தடுப்பது தவறான நிலையாகும். மேலும், மின் பகிர்மான கழகத்தின் 2.9.2013 கடிதத்தில் கூறப்படுவது மின்இணைப்பு வழங்கப்பட்ட மின் இணைப்புகளின் இடமாற்றம் பற்றியது. மின் இணைப்பு வழங்கபடாத பேப்பர் அளவில் உள்ள வழங்கப்படவேண்டிய மின்இணைப்பின் இடமாற்றம் குறித்து அல்ல என்பதையும் மின்குறைதீர்ப்பாளர் தெளிவாக புரிந்து அறியவேண்டும். இந்த விதியை வழங்கபடாத மின்இணைப்புக்கு மின்குறைதீர்ப்பாளர் பயன்படுத்தவேண்டிய அவசியம் எழுவில்லை.

2.12 அதுபோலவே மின்பகிர்மான கழகத்தின் 22.7.2011 கடிதத்தில் விண்ணப்பதாரிடம் பெறவேண்டும் என கூறப்படும் நிபந்தனை படிவம் 2011க்கு பிறகு பெறப்படும் மின்இணைப்புகளுக்கு மட்டுமே பொருந்தும். இது முன் தேதியட்டு அமுல்படுத்தமுடியாது எனவே மின்பகிர்மான கழகத்தின் இந்த இரண்டு விதிமுறைகளும், 1999ல் பதிவு செய்த அவரது விண்ணபத்திற்கு ஏற்புடயது அல்லது என்பதை மின்குறைதீர்ப்பாளர் பரிசீலனை செய்யவேண்டும்.

2.13 ஒரு விண்ணபத்தை ரத்து செய்ய மின் உரிமம்தாரருக்கு எந்த அதிகாரமும் இல்லை. விண்ணபதாரர் மின்இணைப் பு பெறவேண்டிய கால அளவில் பெறாமல் தவறினால் மட்டுமே விண்ணப்பம் காலாவதியாகும். மின்விநியோக விதி 31(2)ன் படி தாழ்வழுத்த மினஇணைப்பை பொறுத்தவரை அறிவிப்பு வழங்கிய ஒரு மாதத்திற்குள் மின்இணைப்பு பெறவேண்டம். 31(3)ன் படி ஒரு மாதத்திற்கு மின் இணைப்பு பெறதவறினால் மேலும் ஒரு மாத கால அவகாச அறிவிப்பு வழங்கப்படும். மேற்படி அறிவிப்பு காலத்திற்குள் மின்இணைப்பு பெறவில்லை என்றால் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்.

2.14 அதுபோலவே மின் பகிர்மான விதி 27(1)ன் படி விண்ணபதாரர்தனது பெயரில் உள்ள இதர மின் இணைப்புகளுக்கு நிலுவைத்தொகை செலுத்தாமல் இருந்தால் மின்இணைப்பு வழங்க மின் உரிமைதாரர் மறுக்கலாம். இது தவிர இதர காரணங்களுக்காக மின் இணைப்பு வழங்க மறுத்து விண்ணபத்தினை ரத்து செய்ய இயலாது. எனவே, அவரது விண்ணப்பம் தகுதியற்றது என மின்உரிமம்தாரர் ரத்து செய்ததாக கூறுவது தவறானது, விதிமுறைகளுக்கு முரணானது.

2.15 அவரது விண்ணப்பம் தகுதியற்ற நியைில் உள்ளது என்பது தவறான வாதமாகும். ஒரு விண்ணப்பம் தகுதியற்றது என்றால் விண்ணபத்தை பதிவு செய்யும்போதே நிராகரிக்க வேண்டும். விண்ணபத்தை ஏற்றுக்கொண்டு 15 ஆண்டு காலம் அவகாசம்

எடுத்துக்கொண்டு நிராகரிக்கக் கூடாது. அவர் ஏற்கனவே இருந்த மின்இணைப்பை மறைத்து விண்ணப்பம் கொடுத்தார் என்பது முற்றிலும் தவறு.

2.16 1999ல் கொடுத்த விண்ணப்பம் கொடுத்தபோது விண்ணப்பத்தில் வேறு மின்இணைப்போ அல்லது மின்இணைப்பில் பாகமோ உண்டா என்று எந்த தகவலும் அவரிடம் கோரவில்லை. அவர் அவரது விண்ணப்பத்துடன் கிணற்றின் உரிமைக்கு ஆதாரமாக அவரது குடும்ப பாகப்பிரிவினைப் பத்திரத்தை அளித்துள்ளார். அதில் சர்வே எண்.3/1Aல் உள்ள கிணற்றில் 6ல் ஒரு பகுதி சொந்தம் என குறிப்பிட்டு மின்இணைப்பிலும் அவருக்கு 6ல் ஒரு பகுதி சொந்தம் என குறிப்பிட்டு மின் இணைப்பிலும் அவருக்கு 6ல் ஒரு பகுதி சொந்தம் என குறிப்பிட்டு மின் இணைப்பின் மோட்டரின் மதிப்பு வழங்கப்பட்டுள்ளளது. அப்போது விண்ணப்பத்தை ஆராய்ந்து ஒத்துக்கொண்டு விண்ணப்பத்தினை பதிவு செய்தது மின்வாரிய அலுவலர்கள்தான். எனவே, தவறு அவர்களுடையதுதான் என்னுடையது அல்ல. அப்போதே அவருடைய விண்ணப்பம் மறுக்கப்பட்டிருந்தால் அவர் அவருக்கு சொந்தமான நிலஅளவை எண்.3/1பிக்கு விண்ணப்பம் கொடுத்திருக்க முடியும்.

2.17 வேறு நிலம் அவருக்கு இல்லை அதனால் ஏற்கனவே மின்இணைப்பில் பகுதியான பாத்தியமுள்ள கிணற்றில் மேலும் ஒரு மின்இணைப்பு கேரினால் மட்டுமே அவரது விண்ணப்பம் தகுதியற்றதாகும். ஆனால், அவர் மின்இணைப்பு கோருவது வேறு ஒரு நிலஅளவை எண்ணான 3/1பில் தான் மின் குறைத்தீர்ப்பாளர் அவர்கள் விண்ணப்பத்தில் நிலஅளவை மாற்றம் செய்வது குறித்து விதிமுறைகளை தவறாக அறிவதும், நடைமுறையில் உள்ள மின்இணைப்புகளுக்கான விதியை, வழங்கப்படாத மின் இணைப்புகளுக்கு பொருத்தி பார்ப்பதும் விண்ணப்பமே தகுதியற்றது என கருதுவதும், முழுக்க முழுக்க அனுமானங்களின் அடிப்படையில் முடிவெடுப்பதும் அவரின் எதிர்மறையான சிந்தனையை

வெளிப்படுத்துகிறது. இது அவரின் பொருண்மைப்பற்றிய தவறு மற்றும் அடிப்படை உண்மைப்பற்றிய அறியாமை ஆகியவைகளின் காரணமாக வழங்கப்பட்ட தீர்ப்பாக உள்ளது.

**5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:</u>**

**5.1** மாண்புமிகு ஒழுங்குமுறை ஆணையத்தால் வகுக்கப்பட்ட விதிகள் யாவும் கொள்கை முறையிலான வழிகாட்டுதல்கள் ஆகும். அன்றாட செயல்பாட்டு முறைகளுக்கான உத்தரவுகள் மின்வாரியத்தால் அவ்வப்பொழுது அளிக்கப்பட்டு வருவதின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**5.2** மின்விநியோக விதி பிரிவு 27(1)ல் மேல்முறையீட்டாளரால் குறிப்பிட்டவாறு தேசிய மின்சார கொள்கை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

**5.3** மேல்முறையீட்டாளரால் தெரிவிக்கப்பட்டுள்ள மின்விநியோக விதி பிரிவு 28 மேல்முறையீட்டாளரின் கோரிக்கை சம்பந்தப்பட்டது அல்ல என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**5.4** மின்இணைப்பு கோரும் கொமாரபாளையம் கிராம க.சஎ.ண.3/1Aல் உள்ள துரஸ்து கிணற்றில் ஏற்கனவே உள்ள மின்இணைப்பு எண். 372–002–124 ஆனது 3 HP பளுவுடன் திரு. பழனிச்சாமி அவர்கள் பெயரில் இருந்துவருகிறது. மேற்படி கிணறு மற்றும் மின்இணைப்பில் 6ல் 3 பங்கு மனுதாரரின் தந்தை திரு. பழனிச்சாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டு இருந்தது. 29.4.1991ல் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிவினைப்படி மேற்படி கிணறு மற்றும் மின்இணைப்பில் 6ல் 1 பங்கு மனுதாரருக்குப் பாத்தியப்பட்டது. 13.9.2007 தேதியிட்ட கிரையப் பத்திரத்தின்படி மேற்படி கிணறு மற்றும் மின் இணைப்பில் மனுதாரர் தனது தமையனார் மற்றும் சகோதரி ஆகியோரிடமிருந்து மொத்தம் 6ல் இரண்டு பங்கை கிரையம் பெற்றதின் பேரில் மேல்முறையீட்டாளருக்கு 6ல், 3 பங்கு உரிமை ஏற்பட்டது

இந்நிலையில் மனுதாரர் 4.12.1999 அன்று மேற்படி கிணற்றிற்கு மனுதாரர் பெயரில் தனித்து 5 HP மின்இணைப்பு வேண்டி விண்ணப்பம் செய்துள்ளளார்.

5.5 மேற்படி விண்ணப்பத்தின் மீது தயார்நிலையைப் பதிவு செய்ய வேண்டி செயற்பொறியாளர்/இபே/தாராபுரம் அவர்கள் 11.11.2010 தேதியிட்ட கடிதம் மூலம் மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டது. மேலும், மேற்படி தயார்நிலையைப் பதிவு செய்வது தொடர்பாக நினைவூட்டல் கடிதம் 4.8.2011ல் வழங்கப்பட்டது.

5.6 இந்நிலையில் மனுதாரர் மேற்படி விண்ணப்பத்தினை தனக்கு பாத்தியப்பட்ட க.சஎ.ண 3/1பிக்கு மாற்றல் கோரி அளித்த விண்ணப்பம் உதவி செயற்பொறியாளர்/இபே/மூலனூர் அவர்களால் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்டது. மேற்படி கோப்பினை கூர்ந்தாய்வு செய்ததில் க.சஎ.ண3/1Aல் ஏற்கனவே உள்ள 372–002–124 மின்இணைப்பில் மனுதாரருக்கு பாத்தியம் இருந்ததால் கோப்பு உதவி செயற்பொறியாளர்/இபே/மூலனூர் அவர்களுக்கு திருப்பப்பட்டது.

5.7 மேற்படி கொமாரபாளையம் கிராமம் க.சஎ.ண3/1Aல் உள்ள கிணற்றில் உள்ள மின்இணைப்பு எண்.372–002–124ல் மனுதாரருக்கு உரிமை இருப்பதால் மேற்படியாரின் காலநீட்டிப்பு கோரும் விண்ணப்பம் ஏற்கப்படவில்லை. மேலும், மேற்படியாரின் விவசாய விண்ணப்பம் பதிவு எண்.324/04.12.1999 எதிர்மனுதாரரின் 13.1.2016 தேதியிட்ட கடிதம் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது.

5.8 மேற்படி மின்இணைப்பு கோரும் கொமாரபாளையம் கிராம க.சஎ.ண3/1Aல் உள்ள கிணற்றில் உள்ள மின்இணைப்பு எண்.372–002–124ல் மனுதாரருக்கு உரிமை உள்ளதால் 1.LR.NO.SE/RE&I(D)/EE-RE/A1-F/DOC/D906-11 DATED 22/7/201 மற்றும் (2) LR/NO/SE/43 & (D)/EE/RE/A1/F/DOC/D652-13 DATD 2.9.2013ன்படி அதே

கிணற்றுக்கு மனுதாரர் பெயரில் மின்இணைப்பு வழங்கவோ வேறு கிணற்றுக்கு மாற்றம் செய்யவோ இயலாது.

5.9 விண்ணப்பிக்கும் இடத்தில் தான் மின்இணைப்பு பெறவேண்டும் என்ற சட்டமும் இல்லை. கட்டாயமும் இல்லை என்பது மனுதாரரின் விண்ணப்பத்தைப் பொறுத்து ஒவ்வாததாகும். ஏற்கனவே விண்ணப்பம் செய்த கிணற்றில் தண்ணீர் இல்லை என்பதால் வேறு கிணற்றுக்கோ ஆழ்குழாய் கிணற்றுக்கோ மாற்றல் செய்வது ஏற்புடைதாகும். ஆனால், மனுதாரரின் விண்ணப்பமே DUPLICATE APPLICATION என கருத்தில்கொள்வதால் விண்ணப்பமே செல்லாததாகி விடுவதால் இது பொருந்தாது.

5.10 மேல்முறையீட்டாளரால் சுட்டிகாட்டப்பட்டுள்ள விதி பிரிவு 8க்கும் மேற்படி மின்இணைப்பு தொடர்பாக வழக்குக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை.

5.11 விவசாய விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சம்பந்தப்பட்டட கிணற்றுக்கு தான் கோரப்பட்டுள்ளது. எனவே, விண்ணப்பம் என்பது சம்பந்தப்பட்ட கிணற்றுக்குத்தான் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

5.12 மின்விநியோக விதி 37 இந்த விண்ணப்பத்திற்கு பொருந்தாது. மின்பாதை அனைத்தும் அமைக்கப்பட்டு மின்இணைப்பு வழங்க இருக்கும் விண்ணப்பங்களுக்கு மட்டுமே இது பொருந்தும். மேல்முறையீட்டாளரின் விண்ணப்பமும் செல்லத்தக்கது அல்ல என்ற நிலையில் இடமாற்றம் என்ற கேள்வியே எழவில்லை.

5.13 மின் வழங்கல் விதி 5ல் மின்இணைப்பு வழங்குவது பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை..

5.14 மேல்முறையீட்டாளரால் குறிப்பிட்டப்பட்டுள்ள மின்விநியோக விதி 31(2), 31(3) பகிர்மான விதி 27(1) ஆகிய யாவும் சீராய்வு மனுவில் மேல்முறையீட்டாளரால் குறிப்பிடப்பட்டுள்ள விவசாய மின் இணைப்பு விண்ணப்பத்திற்கு பொருந்தாது. மேல்முறையீட்டாளரின்

விவசாய விண்ணப்பமும் செல்லத்தக்கதாக இல்லை என்பதால் மேற்படி விதிகள் பொருந்தாது.

5.15 4.12.1999 அன்று மேல்முறையீட்டாளரால் வழங்கப்பட்ட விவசாய மின்இணைப்பிற்கான விண்ணபத்தில் வரிசை எண்.9ல் கிணற்றுக்கு அருகாமையில் உள்ள மின்சார பம்ப் செட்டின் சர்வீஸ் நெ. பெயர் கேட்கப்பட்டுள்ளது. ஆனால், மேல்முறையீட்டாளரால் இதற்கு எந்த ஒரு விபரமும் அளிக்கப்படவில்லை

5.16 மேற்படி விண்ணபத்தில் மேற்படி கிணற்றில் இருந்து விவசாய மின் இணைப்பில் விண்ணபதாருக்கு சொந்தம் பற்றிய விபரங்களை குறிப்பிட்டிருந்தால் அப்போதே விண்ணப்பம் ஏற்கத்தக்கதல்ல என்று தெளிவுப்படுத்தப்பட்டிருக்கும்.

6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை :</u>

6.1 மறு ஆய்வு மனு செய்துள்ள மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 17.11.2016 அன்று நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளரும் அவரின் சார்பில் திரு. ராஜேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

6.3 எதிர்மனுதாரரது சார்பில் திரு முருகானந்தம், செயற்பொறியாளர்/தாராபுரம் அவர்களும் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

7. <u>மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>

7.1 மேல்முறையீட்டாளரின் சார்பில் கேட்புரையில் கலந்து கொண்ட திரு ராஜேந்திரன் அவர்கள் மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மின் வாரியத்தின் சொந்த விதிமுறைகளை அமல்படுத்தி மின்இணைப்பை வழங்க மறுப்பது விதிகளின்படி தவறு என்ற கோரிக்கையின் அடிப்படை உண்மை அறியாமல் தீர்வு வழங்கியுள்ளது அவர் சுட்டிகாட்டியுள்ள விதிமுறைகளின் பொருண்மை பற்றி அறியாமல் வெளிப்படையாக தெரியும் சட்ட விதிகளை எதிர்மறையான நோக்குடன் அனுமானங்களின் அடிப்படையில் அணுகுவதால் ஏற்பட்ட தவறாகும் என்று வாதிட்டார்.

7.3 மேல்முறையீட்டாளருக்கு ஏற்கனவே உள்ள மின்இணைப்பில் முழு உரிமையில்லை. ஒரு பகுதி உரிமைதான் உள்ளது அவ்வாறு பகுதி உரிமையை முழு உரிமையாக எடுத்துக்கொண்டு வேறு மின்இணைப்பு வழங்க முடியாது என்று தள்ளுபடி செய்வது எந்த விதியின்படி என்று தெரிவிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

7.4 விவசாய மின்இணைப்பு பதிவு என்பது ஒரு விண்ணப்பத்தின் பதிவுதான். அதில் தெரிவித்துள்ள இடத்தில்தான் மின்இணைப்பு பெறவேண்டும் என்பது சட்ட விதிகளின்படி கூறப்படவில்லை. இடமாற்றத்தை/நில அளவை எண்.மாற்றத்தை, வழங்கல் விதியோ, மின்பகிர்மான விதிதொகுப்போ தடுக்காத நிலையில் விண்ணபத்தை வேறு நில அளவையிலுள்ள வேறு கிணற்றிற்கு மாற்ற முடியாது என்பது தவறு. மின்குறைதீர்ப்பாளர் மின்இணைப்பு கோரும் விண்ணபத்தில் ஆவணங்கள், கிணற்றிற்குத்தான் கோரப்படுவதால் பதிவு கிணற்றிற்குதான் என்று தீர ஆய்வு செய்யாமல் தீர்வு செய்துள்ளார். ஆவணங்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட நபரின் உரிமையில் உள்ளதா என்பதை உறுதிபடுத்துவதற்காகத்தான் பெறப்படுகின்றன. எனவே, விண்ணப்பதாரர்தான் மின்இணைப்பை பெறுவார். அவர் கோரும் நில அளவை மாற்றம் தரப்படவேண்டும் என்றும் அவ்வாறு ஆராய்ந்து அறிய மின்குறைதீர்ப்பாளர் தவறியது அவர் அடிப்படை உண்மை பற்றி அறியாமல் எடுத்த முடிவு என்றும் வாதிட்டார்.

7.5 விண்ணப்பித்த நபர் இறந்துவிட்டால் அவரின்வாரிசுக்கு விண்ணப்பம் மாற்றப்படுகிறது. கிணற்றில் நீர் இல்லை என்றால் விண்ணப்பம்/மின்இணைப்பு விண்ணப்பதாரர் / மின் இணைப்பின் உரிமையாளருக்கு சொந்தமான வேறு கிணற்றிற்கு மாற்றப்படுகிறது. இங்கு உரிமைதான் எடுத்துக் கொள்ளப்படுகிறது. எனவே, விண்ணப்பித்தவரின் உரிமையை பதிவு செய்வதுதான் விண்ணப்பதிவு. அதனால், வேறு கிணற்றிற்கு விண்ணப்பத்தை மாற்ற கோருவது விதிகளுக்கு உட்பட்டுதான் என்றும் வாதுரை புரிந்தார்.

7.6 விதி 37ன் படி ஒரு இடமாற்றத்திற்கான செலவை யார் ஏற்கவேண்டும் என்பதுதான். ஆனால், லைன் இழுக்காத நிலையில் உள்ள மின்இணைப்புகளுக்கு இடமாற்றம் செய்ய எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை என்பதை மின்குறைதீர்ப்பாளர் கவனிக்க தவறிவிட்டார். பல பணிகளை செய்தபின்பு இடமாற்றம் செய்ய முடியும் என்ற நிலையில் பணிகளே செய்யாத நிலையில் இடமாற்றம் கூடாது என்பது தவறு என்றும் வாதிட்டார்.

7.7 மின் வழங்கல் விதி 5(6) இடமாற்றம், அதற்குண்டான கட்டணம் குறித்தும் விவரிக்கப்பட்டுள்ளளது. இவை நடைமுறையில் உள்ள மின் இணைப்புகளுக்கு பொருந்தும். நடைமுறையில்உள்ள மின்இணைப்புகளை கதவு எண் மாற்றி சர்வே எண். மாற்றி இடமாற்றம் செய்யலாம் என கட்டணம் பெற்றுக் கொண்டு அனுமதிக்கும் பொழுது அளிக்கப்படாத விவசாய மின்இணைப்புகளுக்கு சர்வே எண். மாற்றம் செய்ய தடைஇருக்க முடியாது என்றும் வாதிட்டுள்ளார்.

7.8 ஒரு மின்சார இணைப்பு கோரும் விண்ணப்பத்தை இரத்து செய்ய மின் உரிமம்தாரருக்கு அதிகாரம் இல்லை . விண்ணப்பதாரர் மின்இணைப்பை பெறவேண்டிய கால அளவில் பெறாவிடில் மட்டுமே விண்ணப்பபம் காலவதியாகும். மின்விநியோக விதி 31(2)ன் படி தாழ்வழுத்த மின்இணைப்பை பொறுத்ததவரை அறிவிப்பு வழங்கிய ஒரு மாதத்திற்கும் மின்இணைப்பை பெறவேண்டும். 31(3)ன் படி ஒரு மாத காலத்திற்கு மின்இணைப்பை

பெறாவிடில் மேலும் ஒரு மாதகால அவகாசம் வழங்கப்படும். அவ்வாறு மின்இணைப்பை பெறாவிடில் விண்ணப்பம் ரத்து செய்யப்படும்

7.8 மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் தகுதியற்றது என்றால் விண்ணப்பத்தை பதிவு செய்வதற்கு முன்பே நிராகரித்திருக்க வேண்டும். ஆனால், பதிவு செய்து 15 வருடங்கள் கடந்த பின்பு விண்ணப்பத்தை நிராகரிப்பது தவறு. மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு உள்ளதை மறைத்து மின்இணைப்பு கோரினார் என்பது தவறு. விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் பொழுது விண்ணபத்தில் ஏற்கனவே மின்இணைப்பு உள்ளதா ? அதில் பங்கு உள்ளதா என்று கோரப்படவில்லை. மேல்முறையீட்டாளரின் விண்ணபத்துடன் பாகப்பிரிவினைப் பத்தின் நகல் இணைக்கப்பட்டுள்ளது. அதன்படி மின்இணைப்பில் 1/6 பங்கு சொந்தம் என்பது தெளிவாக குறிக்கப்பட்டுள்ளது. எனவே, விண்ணபத்தை பதிவு செய்தது வாரிய அலுவலர்கள் தான். எனவே, விண்ணப்பம் தகுதியற்றது என்றால் அதற்கு பதிவு செய்தது அலுவலர்களின் தவறு. அன்று நிராகரித்திருந்தால் அவருக்கு சொந்தமான சர்வே எண்.3/1பி–யில் உள்ள கிணற்றிற்கு தன்னுடைய விண்ணபத்தை சமர்ப்பித்திருக்க முடியும் என்றும் வாதிட்டுள்ளார்.

## 8. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரர் திரு. க. முருகானந்தம் /செயற்பொறியாளர்/தாராபுரம் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலுள்ள வாதங்கள் மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 செயற்பொறியாளர்/ தாராபுரம் அவர்கள் விண்ணபத்தில் அருகில் உள்ள மின்இணைப்பு எண் குறிப்பிடவேண்டும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனா, தெரிவிக்கப்படவில்லை தெரிவிக்கப்பட்டிருந்தால் அப்பொழுதே விண்ணப்பம் ஏற்கதக்கது அல்ல என்று நிராகரிக்கப்பட்டு இருக்கும் என்று வாதிட்டார்.

8.3 மேலும், ஒரு விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தை வேறு கிணற்றிற்கு மாற்ற வேண்டுமெனில், விண்ணப்பத்தை கிணற்றில் நீர் இல்லையென்ற நிலையிலும் நீர் மாசுபட்டு இருந்தாலும் தான் மாற்ற முடியும். இங்கு அவை காரணங்கள் அல்ல. மேலும், விண்ணப்பமே ஏற்கனவே மின் இணைப்பு உள்ள கிணற்றிற்கு என்பதால் duplicate application என்று ஆகிவிடுகிறது. எனவே, தகுதியற்ற விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டது சரிதான் என்று வாதிட்டார்.

8.4 மேல்முறையீட்டாளர் 30.10.2010ல் தயார்நிலையை பதிவு செய்ய அறிவிப்பு கொடுக்கப்பட்டு அவர் அதில் கொடுக்கப்பட்டிருந்த காலக்கெடுவுக்குள் தயார் நிலையை பதிவு செய்யவில்லை என்பதையும் தெரிவித்தார். மேலும, 4.8.2011ல் நினைவூட்டல் கடிதம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

8.5 மின் பகிர்மான விதித்தொகுப்பின் 31(2) மற்றும் 31(3) ஆகியவை விவசாய மின் இணைப்புகளுக்கு பொருந்தாது என்றும் வாதிட்டார்.

8.6 மின் பகிர்மான விதித்தொகுப்பின் விதி 37 இந்த விண்ணபத்திற்கு பொருந்தாது மின்பாதை அமைக்கப்பட்டு மின்இணைப்பு வழங்க இருக்கும் விண்ணப்பங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் வாதுரை புரிந்தார்.

## 9. மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு

9.1 இந்த மேல்முறையீட்டாளர் மின்பகிர்மான கழகம் தனது சொந்த விதிமுறைகளை அமல்படுத்தி மின் இணைப்பு வழங்க மறுத்து தீர்வு வழங்கிது செல்லத்தக்கதா என்று ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளர் தீர்வு வழங்கியிருக்க வேண்டும். ஆனால், அவருடைய கோரிக்கையின் அடிப்படை உண்மை அறியாமல் அவர் சுட்டிக்காட்டியுள்ள விதிமுறைகளின் பொருண்மை அறியாமல் வெளிப்படையாக தெரியும். சட்டவிதிகளை எதிர்மறையான

நோக்குடன் அனுமானங்களின் அடிப்படையில் அணுகுவதால் ஏற்பட்ட தவறாகும் என்று வாதிட்டுள்ளார்.

9.2 அவருக்கு சர்வே எண்.3/1Aல் ஒரு மின் இணைப்பிற்கு மேல் வழங்க மறுப்பது அவரைப்போல் ஏற்கனவே உள்ள மின்இணைப்பில் ஒரு சிறிய பாகம் வைத்துள்ளவர்களுக்கு பொருந்துமா என்பதை மின்குறைதீர்ப்பாளர் ஆராய்ந்து தீர்வு செய்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யப்படவில்லை என்று வாதிட்டுள்ளார். மேலும், மின்சார சட்டம் 2003 மின் பகிர்மான விதி மின்வழங்கல் விதி இவற்றின் எந்த பிரிவும் மின்இணைப்பில் ஒரு பகுதி உரிமையை முழு மின் இணைப்பிற்கான உரிமையென கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கவில்லை என்றும் வாதிட்டுள்ளார்.

9.3 ஒரு விண்ணப்ப பதிவு என்பது விவசாயின் உரிமையை பதிவு செய்வதாகும். விண்ணப்பித்த இடத்தில்தான் மின்இணைப்பு பெறவேண்டும் என்று சட்டமும் இல்லை கட்டாயமும் இல்லை இடமாற்றத்தை மின் வழங்கல் விதியோ மின்பகிர்மான விதியோ தடுக்காத நிலையில் மின்பகிர்மான கழகம் தடுக்க முடியாது என்று வாதிட்டுள்ளார். ஆனால், மின்குறைதீர்ப்பாளர் கிணற்றிற்குதான் பதிவு நபருக்கு அல்ல என்று தீர்மானித்துள்ளார். அது தீர ஆராய்ந்து எடுக்கப்படாத முடிவு என்றும் வாதிட்டுள்ளார். மேலும், கிணற்றிற்கு விண்ணப்பிற்கும் நபர் இறந்துவிட்டால் விண்ணப்பம் அவரின் வாரிசுக்கு மாற்றப்படுகிறது. பதிவு செய்த கிணற்றில் /மின்இணைப்பு உள்ள கிணற்றில் நீர் இல்லை என்றால் வேறு கிணற்றிற்கு இடமாற்றம் அனுமதிக்கும் நிலையில் கிணற்றின் உரிமையை பதிவு செய்வதுதான் விண்ணப்ப பதிவு என எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும். இது மின்குறைதீர்ப்பாளரின் பொருண்மையை பற்றி அறியாமை மற்றும் அடிப்படை உண்மை பற்றி அறியாததால் ஏற்பட்டுள்ள தவறு என்றும் வாதிட்டுள்ளார்.

9.4 அவருடைய விண்ணப்பத்தை தகுதியற்றது என்று கூறுவது தவறான வாதமாகும். ஒரு விண்ணப்பம் தகுதியற்றது என்றால் அந்த விண்ணப்பத்தை பதிவு செய்வதற்கு முன்பு நிராகரித்திருக்க வேண்டும் . ஆனால், விண்ணப்பத்தை பதிவு செய்த பின்பு 15 வருடங்கள் கழித்து நிராகரிப்பது தவறு . விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள குடும்ப பாகப்பிரிவினை பத்திரத்தில் சர்வே எண்.3/1Aல் உள்ள கிணற்றில் 6ல் ஒரு பகுதி சொந்தம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பொழுதே விண்ணப்பத்தை நிராகரித்திருந்தால் அவருக்கு சொந்தமான 3/1பி– ற்கு விண்ணப்பம் சமர்ப்பித்திருக்க முடியும். மின்இணைப்பு எண். உள்ள 3/1Aல் மேலும் மின்இணைப்பு கோரினால்தான் விண்ணப்பம் தகுதியற்றது ஆகும். ஆனால், அவர் மின்இணைப்பு கோருவது 3/1பி–ல் என்றும் வாதிட்டுள்ளார்.

9.5 ஒரு மேல்முறையீட்டாளரின் மனுவை மறு ஆய்வு செய்ய வேண்டுமெனில் எந்த நிலையில் மறு ஆய்வு கோரலாம் என்பதை தெரிந்து கொள்ள நாம் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான விதித்தொகுப்பின் விதி 22(6)ஐ ஆராய வேண்டும். அந்த விதி 22(6) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"(6) The Ombudsman may on his own or on the application of any of the persons or parties concerned within 30 days of the making of the decision, direction or order review such decision, direction or order on the ground that such decision, direction or order was made under a mistake of fact, ignorance of any material fact or any error apparent on the face of the record.*

*(a) The application for such review shall contain the name and address of the petitioner, Order Number & date of the Electricity Ombudsman and the grounds for review i.e, (i) mistake of fact (ii) ignorance of material fact (iii) error apparent on the face of the record."*

9.6 மேற்கண்ட விதிகளை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது மின்குறைதீர்ப்பாளர்19 ஒரு தீர்வை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்றால் அந்த தீர்வில் பொருண்மை

பற்றி தவறு, அடிப்படை உண்மை பற்றிய அறியாமை மற்றும் வெளிப்படையாக தெரியும் பிழைகள் இருக்க வேண்டும் என்று தெரிகிறது.

**9.7** இந்த மேல்முறையீட்டாளர் உரிமம்தாரரின் சொந்த விதிமுறைகளின்படி மின்இணைப்பு வழங்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது தவறு என்று மின்குறைதீர்ப்பாளர் தீர்வு செய்திருக்கவேண்டும் என்று வாதிட்டுள்ளார். ஆனால், மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு மின்பகிர்மான விதித்தொகுப்பின் 29(2)ன் படி ஒருவருக்கு ஒரு புல எண்ணில் ஒரு மின்இணைப்புதான் வழங்க முடியும் என்பதால் ஏற்கனவே புல எண்.3/1Aல் உள்ள விவசாய மின் இணைப்பில் மேல்முறையீட்டாளருக்கும் பங்கு உள்ளது என்பதால் மேலும் ஒரு மின்இணைப்பு பெறமுடியாது என்று தீர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட தீர்வு உரிமம்தாரரின் ஆணையின்படி அல்ல ஆணையத்தின் தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் படி என்பதால் மேல்முறையீட்டாளரின் வாதம் ஏற்புடையது அல்ல.

**9.8** விண்ணப்ப பதிவு என்பது கிணற்றிற்கு அல்ல, அது விண்ணப்பதாரரின் உரிமையை பதிவு செய்வதுதான் எனற வாதம் ஏற்கனவே மேல்முறையீட்டு மனு எண்.16/2016ற்கான ஆணையின் பத்தி எண்.11.8, 11.9 மற்றும் 11.10ல் ஆராயப்பட்டு மின்குறைதீர்ப்பாளரால் தீர்வு வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட வாதமும் ஏற்புடையது அல்ல.

**9.9** மேல்முறையீட்டாளரின் அவருடைய விண்ணப்பம் தகுதியற்றது என்று கூறுவது சரியான வாதம் அல்ல என்று வாதிட்டுள்ளார். அந்த வாதத்தில் அவர் ஒரு உரிமையுள்ள மின்இணைப்பு உள்ள 3/1Aல் மேலும் மின்இணைப்பு கோரினால்தான்

அந்த விண்ணப்பம் தகுதியற்றது ஆகும் என்று தெரிவித்து தான் 3/1Bல் மின்இணைப்பு கேட்பதாக வாதம் வைத்துள்ளார். ஆனால், விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்ப பதிவு 3/1Aல் என்பதால் அந்த சர்வே எண்ணில் ஏற்கனவே மேல்முறையீட்டாளருக்கு பங்குஉரிமை உள்ள வேறு மின்இணைப்பு உள்ளதால் மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 29(2)ன் படி மேலும் ஒரு மின்இணைப்பு வழங்க முடியாது. எனவே, அது தகுதியற்ற விண்ணப்பம் என்று ஆகிவிடுகிறது. எனவே, அவ்வாறு தகுதியற்ற தள்ளுபடி செய்யப்படவேண்டிய விண்ணப்ப பதிவை வேறு சர்வே நம்பருக்கு மாற்ற வேண்டும் என்பது ஏற்புடையது அல்ல. இங்கு மேல்முறையீட்டாளரே சர்வே எண்.3/1Aல் மின்இணைப்பு கோரினால் விண்ணப்பம் தகுதியற்றது என்பதை தெரிவித்துள்ளார் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

9.10 மேல்முறையீட்டாளர் ஒரு மின்இணைப்பு வழங்கப்பட்ட பின்பு இயக்கத்தில் உள் மின்இணைப்புகளை மாற்றுவதற்கு மின் வழங்கல் விதி 37ன் படி முடியும் என்ற நிலையில் அளிக்கப்படாத மின்இணைப்பிற்கு சர்வே எண். மாற்றி வழங்குவதற்கு என்ன தடை இருக்க முடியும்என்றும் வாதிட்டுள்ளார்.

9.11 மேற்கண்டவாதம்மேல்முறையீட்டு மனு எண்.16/2016ற்கான ஆணையின் பத்தி 11.13, 11.14 மற்றும் 11.15ல் ஆராயப்பட்டு தீர்வு வழங்கப்பட்டுள்ளது. எனவே, அந்த வாதம் ஏற்புடையது அல்ல.

9.12 மேலே உள்ள பத்திகளில் உள்ள காரணங்களால் மேல்முறையீட்டாளரின் வாதங்கள் அனைத்தும் ஒரு தீர்வை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதித்

தொகுப்பின் விதி 22(6)ல் தெரிவித்துள்ள பொருண்மை பற்றிய தவறு, அடிப்படை உண்மை பற்றிய அறியாமை வெளிப்படையாக தெரியும் தவறுகள் என்று எடுத்துக் கொள்ள முடியாது என்பதால் மேல்முறையீட்டு மனு எண்.16/2016ஐ மறு ஆய்வு செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10. முடிவுரை**

**10.1** மேலே பத்தி 9ல் உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் மறு ஆய்வு கோரும் மனு எண்.4/2016 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. P. ரங்கநாதன்,
த/பெ பழனிச்சாமி,
கொமாரப்பாளையம் அஞ்சல்,
மூலனூர் வழி,
தாராபுரம் வட்டம் 638 106.

2) செயற் பொறியாளர் /இ & ப,
தாராபுரம்,
உடுமலைப்பேட்டை மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
உடுமலைப்பேட்டை ரோடு,
தாராபுரம் – 638 656.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
உடுமலைப்பேட்டை மின்பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எரிபாளையம், திருப்பூர் ரோடு,
உடுமலைப்பேட்டை 642 126.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.